பத்திரம் என்ற முறையிலே திரட்டி, அதற்குப் பின்னால் அதை தேசிய வங்கியில் செலுத்தி, தேசிய வங்கி மூலம் நகராட்சிகளுக்கு கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு பண உதவி செய்வதற்காக ஒரு நிறுவனத்தை உருவாக்குவது என்பது வரவேற்கத்தக்கது. ஏற்கெனவே நகராட்சிகளுக்குக் கொடுப்பதற்கு என்று தீர்மானிக்கப்பட்ட பணத்தை அவை களுக்குக் கொடுக்காமல் இருக்கிறார்களே அதற்கு இந்த நிறுவனம் பயன்படுமா ? உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் கோவை மாநகராட்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் இறந்து போனால் அவர்களுடைய ஈமச்செலவுக்கு 50 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று இருப்பதை வருஷக்கணக்கில் கொடுக்காமல் இருக்கிறார்கள். இதுபற்றி நானே அமைச்சரிடம் நேரில் சொல்லியிருக்கிறேன். சென்ற ஆண்டு 5,000 ரூபாய் ஒதுக்கப் பட்டிருந்தும், அந்தப் பணம் அங்கே போய்ச் சேரவில்லை என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட நிதி குறைபாடுகளை எப்படி சமாளிப்பது ? இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் ஏதாவது செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது அரசாங்கத்தின் மூலமாக நடைபெறக் கூடிய திட்டங்களுக்கு ஒவ்வொரு நகராட்சிக்கும் அல்லது உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் நிதி உதவி செய்வது. அந்த நிதி வரவில்லை என்றாலும் அந்தந்த நிறுவனத்ினுடைய 'ஜெனரல் ஃபண்டி'லிருந்து ஆணையாளர் அல்லது தனி அதிகாரி கொடுக்கலாம். அவர்கள் கொடுக்கவில்லை என்பதை இப்போது என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி இருந்தால் அது கண்டிப்பாக சீர் செய்யப்படும்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த நகராட்சி நிதிக் கார்ப்பரேஷன் நகராட்சி அந்தஸ்தில் உள்ள நகரியங்களுக்கும் கடன் கொடுக்க வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நகராட்சிகள் என்று சொல்லும்போது அவற்றுக்குப் பக்கத்தில் இருக்கிற உள்ளாட்சி மன்றங்களுக்கும் இந்த நிதிக் கார்ப்பரேஷன் உதவுவதாகத்தான் இருக்கும். குறிப்பாக நகராட்சிக்குப் பக்கத்திலே இருக்கிற அர்பன் பகுதிக்கும் இந்த கடன் உதவி வழங்கப்படும். ஆகவே, நகரியங்களும் சேர்த்துக்கொள்ளப் படும்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்துக்கான கப்பல்கள் வாங்குவதற்கான அனுமதி.

68 (*வினா எண் 19014)—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1984 பிப்ரவரி 18]

(அ) 1983 மார்ச்சில் மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சரை மாநில மின்துறை அமைச்சர் சந்தித்து தமிழ்நாடு அரசு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு மூன்று கப்பல்கள் வாங்கும் விஷயமாகப் பேச்சுவார்த்தை நடத்தியது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) மிகவும் சிக்கனமான முறையில் நிலக்கரியை ஹால்டியாவிலிருந்து தூத்துக்குடி அனல்மின் நிலையத்திற்கு எடுத்துச் செல்ல பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட மூன்று கப்பல்களை பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் வாங்குவதற்கான ஏற்பாடு செய்தது. இது சம்பந்தமாக மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெறுவதற்காக அன்றைய போக்குவரத்து அமைச்சரோடு நேரடியாகப் பேசப்பட்டது.

(முற்பகல் 9—30)

69 (*வினா எண் 21371)—திரு. என். பழனிவேல் மற்றும் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசுக்கு வெளிநாடுகளிலிருந்து கப்பல்கள் வாங்க மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அனுமதி வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஒரு புதிய கப்பல் ஜப்பானிலிருந்து வாங்க, மத்திய அரசு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கியுள்ளது.

(ஆ) இப்போது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்தக் கப்பல் கட்டுவதற்கான ஆர்டர் கப்பல் தளத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மத்திய அமைச்சரைச் சந்தித்துப் பேசியதாகச் சொன்னார்கள். ஏற்கனவே பத்திரிகைகளில் ஒரு கப்பல் வாங்குவதற்காக அனுமதி அளித்ததாக செய்திகளை நாங்கள் பார்த்தோம். இப்போது மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது எவ்வளவு கப்பல்கள் வாங்குவதற்காக ? எந்த நாட்டிலிருந்து ? ஒரு கப்பலின் கிரயம் எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒரு கப்பலை வாங்குவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. ஜப்பானிலிருந்து வாங்கிக் கொள்ளலாம் என்று அனுமதி கொடுத்திருக்கிறது. விலை (யென் 4991 மில்லியன்) ரூ. 21 கோடி

TRUTH ALONE TRIUMPHS